புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# பண்பாடு என்பதன் பொருளும், உட்கூறுகளும்

சு. ஜெயா,
பதிவு எண்.21213274022006, முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), தமிழ் தமிழ் உயராய்வு மையம், விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்.
பல்கலைக்கழகம் : மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி.

முனைவர் கு. இளங்குமார்,
நெறியாளர்
தமிழ்த்துறைத் தலைவர், தமிழ் உயராய்வு மையம், விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்.

### முன்னுரை

பண்பாடு என்பது ஏதோ சில கூறுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு என்றோ, அதனுள் உள்ள கூறுகள் அனைத்தும் ஏதோ சில செயல்களுக்காக மட்டுமே உள்ளன என்றோ, அக்கூறுகளை மக்கள் தான்தோன்றித்தனமாக ஏற்றுக்கொண்டனர் என்றோ கருத முடியாது. பண்பாடு என்பது மிகவும் இணக்கமுற்ற, ஒருங்கிணைந்த ஓர் ஒன்றியமாகும். அதனுள் உள்ள கூறுகளனைத்தும் செயல்நிலையில் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன. தனித்த அடையாளம் கொண்ட எந்த ஒரு குழுவின் / சமூகத்தின் வாழ்வு முறையின் பிரதிபலிப்பாகப் பண்பாடு அமைய, பரந்த ஒரு சமூகத்தின் மேம்பட்ட வாழ்க்கை முறையின் வெளிப்பாடாக நாகரிகம் அமைகிறது. பண்பாட்டின் உச்சகட்ட வளர்ச்சியே நாகரிகம் என்பாரும் உண்டு. “பண்பாடு என்பதன் பொருளும், உட்கூறுகளும்” எனும் தலைப்பில் இவ்வாய்வுக்கட்டுரை ஆராயப்படுகிறது.

### பண்பாடு என்பதன் பொருள்

மக்கள் இந்தப் பூமி, வானம், நீர் போன்றவை அடங்கிய பௌதீகச் சூழலில் பிறந்துள்ளது போலவே அவர்கள் ஒரு குறிப்பிட்ட கலாச்சார சூழலில் பிறந்து அக்கலாச்சாரத்தைத் தம் வம்சவழிப் பாரம்பரியமாகப் பெறுகின்றனர். பண்பாட்டு பாரம்பரியத்திற்கு சமுதாயமே மூலக் காரணம்.

பௌதீகச் சூழலிலிருந்து, மனிதன் தன் வாழ்வை எளிதாகவும், சுகமாகவும் ஆக்கிக் கொள்வதற்காக, தனக்குத்தானே தேடி உருவாக்கிக் கொண்ட கருவிகள், கட்டிடங்கள், அறிவு, நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், மதிப்புகள், மனப்பான்மைகள், சம்பிரதாயங்கள் சட்டங்கள், நீதிகள் ஆகியவையெல்லாம் மனிதனின் கலாச்சாரம் அல்லது பண்பாடு என்பதில் அடங்கும். சமுதாய வழிமுறைகளுக்குட்பட்டு, மனிதர்கள் ஒருவருக்கொருவர் பழகும் முறை, அவர் தம் சிந்தனை மற்றும் செயல்களுக்கு பண்பாடு மெருகூட்டுகிறது. எனவே கலை, மொழி, இலக்கியம், இசை, நடனம், ஓவியம், சிற்பம் ஆகியவை கூட பண்பாட்டில் அடங்குபவையே. ஒரு நாடு தேசிய இனம், சமூகக்குழு ஆகியவை தத்தம் தனித்தன்மை மிக்க நடையுடை பாவனைகள், உணவுப்பழக்கங்கள் கலைகள் ஆகியவற்றைக் கொண்ட பண்பாட்டைப் பெற்றுத் திகழக்கூடும். பண்பாடு மனித இனத்தின் சிறப்புடைமையாகும். விலங்குகளுக்கு பண்பாடு என்பது கிடையாது. பண்பாட்டைப் பரப்புவதில் மொழிக்கு சிறப்பான இடமுண்டு.

### பண்பாடு என்பதன் வரையறை

“பண்பாடு என்பது சமுதாயத்தில் உறுப்பினனாக இருந்து மனிதன் பெற்றிடும் அறிவு, கலை, நீதி, நம்பிக்கைகள், மதிப்புகள், சட்டம், சம்பிரதாயங்கள், மொழி, இன்னபிற ஆற்றல்கள் ஆகியவற்றைக் கொண்ட முழுமையாகும்.” - E.B. டெய்லர்.

“ஒரு தலைமுறை மக்கள் தங்களது அடுத்த தலைமுறையினருக்கு வழங்கக்கூடிய அனைத்தும் பண்பாட்டில் அடங்கும்; மக்களின் பண்பாடு என்பது அவர்களின் சமூகப் பாரம்பரியத்தைக் குறிக்கிறது. பண்பாடு என்ற சிக்கலான முழுமையில், அறிவு, நம்பிக்கைகள், கலைகள், ஒழுக்க நெறிகள், சட்டம், உணவு தயாரிக்கும் முறைகள், தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியன யாவும் அடங்கும்.” - ஸதர்லேண்டு மற்றும் உட்வோர்டு.

பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்கும் வழிகள்

பலவிதமான கலாச்சாரங்கள், பண்பாடுகள், வழிபாட்டு முறைகள், வாழ்க்கை முறைகள், உடை,உணவு பழக்க வழக்கங்கள், பேசும் மொழிகள் ஆகியவற்றில் இந்திய மக்கள் வேறுபட்டு இருப்பினும் ஆன்மீக உணர்வு, எளிய வாழ்வு, உயரிய சிந்தனை, விருந்தோம்பல், கலை உணர்வு அழகுணர்வு, சமயச் சார்பற்ற தன்மை, மக்களாட்சி ஆகியவற்றில் இந்தியர்கள் என்ற உணர்வும், ஒற்றுமையும் பெற்று வாழ்ந்து உலகிற்கு முன்னோடியாக வேற்றுமையில் ஒற்றமையைக் காண்கிறோம். இப்பண்பாட்டு ஒற்றுமையைப் பாடப்பொருளுடன் இணைத்தும், பிணைத்தும் ஆசிரியர்கள் கற்றல் அனுபவங்களாக்கி வகுப்பில் வழங்க வேண்டும்.

பண்பாட்டின் முக்கிய அம்சங்கள்

பண்பாட்டின் பொருள் சார்ந்த கூறு என்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தால் விளைந்த வாழ்க்கையின் சுகபோகப் பொருட்கள், வேளாண்மை மற்றும் தொழில் உற்பத்தி, போக்குவரத்து மற்றம் தகவல் தொடர்பு சாதனங்கள், கேளிக்கை சாதனங்கள், நடையுடை பாவனைகள், உணவு பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். இக்கூறு விரைவாகவும் கண்ணுக்குப் புலப்படும் வகையிலும் மாற்றமடையும் மொழி, மரபுகள், நம்பிக்கைகள், மதிப்புகள், அறநெறிகள், சட்டதிட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பண்பாட்டின் பொருள்சாராக் கூறு மிக மெதுவாக மாற்றமடையும்; கண்ணுக்குப் புலனாகாது.

பண்பாட்டுக் கூறுகள்

ஒவ்வொரு பண்பாடும் ஐந்து உட்கூறுகள் கொண்டு திகழ்கின்றன. அவையாவன:

- பொருட்களை உற்பத்தி செய்து வினியோகிப்பதில் கையாளப்படும் தொழில்நுட்பம்.
- சமூக அமைப்புகள் (குடும்பம், தொழில்வகை குழுக்கள், ஒருவர் பிறரோடு பழக ஒப்புக் கொள்ளப்பட்ட வழிமுறைகள், ஆசிரியர் நடந்து கொள்ள வேண்டிய முறை, பெற்றோரின் கடமைகள், பள்ளியின் செயல்முறைகள், மருத்துவர்கள் போன்ற ஒவ்வொரு தொழிற்பிரிவினரும் இயங்க வேண்டிய முறை, யார் யாரை திருமணம் செய்து கொள்ளலாம் போன்ற மனித நடத்தைகளுக்கான வரையறை).
- சமுதாயத்தின் தத்துவ நோக்கும், மதிப்புகளும் (உ.ம்) இந்துக்கள் கர்மவினை, மறுபிறவி, ஆன்மீகம், எளிய வாழ்க்கை, துறவுநிலை போன்றவற்றைப் பெரிதும் மதிக்கிறார்கள். மனிதனின் இறுதிநோக்கம் கடவுளை அடைவதே என்ற கருத்தியல் கொள்கையில் ஊறிப் போயிருக்கிறார்கள்.
- அறிவு வளர்ச்சிக்கான வழிமுறைகள்.
- இன்பம் பெறுவதற்கான வழிமுறைகள் (உ.ம்) விளையாட்டு, கலைகள், கேளிக்கைச் சாதனங்கள், நுகர்பொருட்கள் போன்றவை.

பண்பாட்டின் இயல்புகள்

அனைத்து மக்களுக்கும் பண்பாடு உள்ளது. பண்பாடற்ற மனிதனே கிடையாது. ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு தனிப்பண்பாடு உண்டு. தமிழர் பண்பாடு, சீக்கியர் பண்பாட்டிலிருந்து மாறுபட்டது.

கற்றலின் விளைவே பண்பாடு. சமூக அங்கத்தினனாக இருந்துதான், தான் சார்ந்த சமூகத்தின் பண்பாட்டைக் கற்றுக் கொள்ள முடியும். தமிழ் குடும்பத்தில் பிறந்த காரணத்தாலேயே குழந்தைகள் தமிழில் பேச முடியாது. தமிழில் பேச முயற்சி செய்து, கற்று

கொள்ள வேண்டும். இன்று அமெரிக்காவில் வாழும் பெரும்பாலான தமிழ்க் குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு தமிழ் பேசத் தெரியவில்லை..

பண்பாடு கூடிப் பெருகுவது ஒவ்வொரு தலைமுறையினரது பங்களிப்பால், ஒரு சமுதாயத்தின் பண்பாடு மெருகேற்றப்படுகிறது. நம் தந்தையின் வாழ்க்கையில் கணிப்பொறி, தொலைக்காட்சி, தகவல் வலைப்பின்னல் போன்றவை அறிந்திராதவை. ஆனால் நாம் இன்று இவற்றைக் கையாள்கிறோம். நமது அடுத்த தலைமுறை நம்மைவிட இன்னும் சிறப்புற்றுக் காணப்படும்.

பண்பாட்டின் அடிப்படை உயர்ந்த சிந்தனைகளும், இலட்சியங்களுமே ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுத் தரம் உயர்ந்து கொண்டே செல்கிறது.

பண்பாடு என்பது தொடர்மாற்றங்களுக்கு ஆட்பட்டுக் கொண்டேயிருக்கிறது. சட்டைப் போடத் துவங்கிய மனிதன், ஸபாரி, கோட்டு என்று தொடர்மாறுதல்களை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கிறான்.

பண்பாடு, பிறவற்றிலிருந்து கிரகித்துக் கொள்ளும் தன்மை கொண்டது. நெகிழ்வுத்தன்மை கொண்டது; இந்தியப் பெண்கள் புடவை கட்டியிருந்தனர். ஈரானிய முஸ்லீம் பெண்கள் சுடிதார், பர்தா அணிந்திருந்தனர். பண்பாடுகளின் பரவல் காரணமாக இன்று இந்தியப் பெண்களும் சுடிதார் அணியத் துவங்கியுள்ளனர்.

பண்பாடு மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. உணர்ச்சிப் பூர்வமாக மனிதனைப் பராமரிப்பது அவனது கலாச்சாரமே கலாச்சார மெருகு இல்லாவிடின், மனிதன் ஒரு சாதாரண உயிரியல் பிராணி மட்டுமே. விலங்குகளைப் போன்றே அவனும் வரைமுறையற்ற வாழ்க்கை வாழ்வான். மனிதனுக்கு அழகு கலாச்சாரமே. மனிதனின் கலாச்சாரம் அவனுடைய நடத்தையில் புலனாகும். ஒரு சமுதாயத்தின் ஒட்டுமொத்த வாழ்வியல் முறைகளே அதன் பண்பாடாகும்.

இந்தியப் பண்பாட்டின் சிறப்பியல்புகள்

இந்தியப் பண்பாட்டில் சிறப்பாகக் கூறத்தக்க சில இயல்புகள் உள்ளன. அவையாவன:

ஆன்மிக வேட்கை: இறைவனைத் தேடல் - எது உண்மையில் உள்ளதோ அதை உணர்தல் - என்பது சுமார் 5000 ஆண்டுகளாக இடையறாது நமது தத்துவ நூல்கள், இலக்கியங்கள், கலைகள், உணவு, உடை, ஆகியவற்றின் மூலம் தொடர்ந்து நிகழ்ந்து வருவதாகும். தத்துவஞானிகள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் நம் நாட்டில் பிறந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

எளிய வாழ்க்கையும், உயர்ந்த சிந்தனையும்: புத்தர்பிரான் முதல் காந்தியடிகள் வரை எத்தனையோ மகான்கள் சிந்தனையில் மிக உயர்ந்தும், வாழ்க்கை முறையில் மிக எளிமையாகவும் வாழ்ந்து காட்டியுள்ளனர். செல்வத்தில் சிறந்தவர்களைவிட பண்பில் மேம்பட்டவர்களையே நமது மக்கள் போற்றுகிறார்கள்.

விருந்தோம்பல்: இல்லறத்தின் பயனும் இல்லறத்தாரின் கடமையும் விருந்தோம்பலாகும். இப்பண்பு வறியவர்களிடமும் காணப்படுவது இந்தியாவின் சிறப்பாகும்.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று" (குறள்.72)

என வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளதையும், அன்னதானம் எல்லா விழாக்களிலும் இன்றியமையாததாக இருப்பதையும் நாமறிவோம்.

சமயப் பொதுநோக்கு: இந்தியாவில் உலக சமயங்கள் அனைத்தும் உள்ளன. இந்திய சமயங்கள் பிற சமயத்தினரை மதிக்க வேண்டும் எனக் கூறியுள்ளன. சமயவெறி இந்தியப் பண்பாட்டிற்குப் புறம்பானதாகும்.

முடிவுரை

பல்வேறு பண்பாடுகளில் காணப்படும் பொதுமைக்கூறுகள் பற்றி விரிவாக விளக்கிய மாலினோஸ்கி. இவரது மறைவிற்குப்பின் 1944இல் வெளியிடப்பட்ட 'பண்பாட்டைப் பற்றிய அறிவியல் கொள்கை' என்னும் நூலில் இதனை விளக்குகிறார். அனைத்துப் பண்பாட்டினருக்கும் அடிப்படைத் தேவைகள் ஒன்றாக உள்ளதால் அவற்றை ஈட்டும் அடிப்படை முறைகளிலும்

ஒற்றுமை நிலவுகிறது. தேவைகளை நிறைவு செய்ய மக்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஏற்படும் பண்பாட்டு மறுவினைகள் ஒரே தன்மையானதாக உள்ளன. அவையே பண்பாட்டுப் பொதுமைக்குக் காரணமாகின்றன. மக்களின் அடிப்படைத் தேவைகளையும் பண்பாட்டு மறுவினைகளையும் அந்நூலில் மாலினோஸ்கி பல நிலைகளில் விளக்குகிறார். பண்பாட்டுக் கூறுகளின் ஒருங்கிணைப்பும் செயற்பாடும் அந்தந்தப் பண்பாட்டினரின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்ற கருத்தை இவரது செயற்பாட்டியத்தின் மையக் கருத்தாகும். இந்தியப் பண்பாடு வேறு நாடுகள் சமயங்களின் தொடர்பால் பல மாற்றங்களை ஏற்றுக் கொண்டுள்ளது எனினும் இந்தியப் பண்பாட்டின் அடிப்படையான தனித்தன்மை வளம் பெற்றுள்ளதே தவிர நலிந்துவிடவில்லை.

துணைநூற்பட்டியல்


1. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மீளச்சு 2021, த பாபிரஸ், அச்சாக்கம்: அடையாளம் பிரஸ், இந்தியா.

2. மீனாட்சி சுந்தரம், அ., மலரும் இந்திய சமுதாயத்தில் கல்வி, திருத்திய இரண்டாம் பதிப்பு: அக்டோபர் 2013, காவ்யமாலா பப்ளிஷர்ஸ், சின்னாளப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

3. நாகராஜன், கி., நடராஜன், சா., சீத்தாராமன், தேவ., மலரும் இந்திய சமுதாயத்தில் கல்வி, முதல் பதிப்பு: செப்டம்பர் 2013, ஸ்ரீராம் பதிப்பகம், சென்னை-93.


********* ********* ********** ********* ********* ********** ********** **********